**சுருக்கம்**

கட்டடங்கள் – வணிகவரித்துறை - முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – சேலம் கோட்டம், நாமக்கல் – ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டுதல் – நிர்வாக அனுமதி வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை**

அரசாணை (நிலை) எண். 21 நாள்: 23.03.2017
துன்முகி, பங்குனி 10
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது:-

கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி ஆணையரின் கடித எண். எல்1/19754/2016, நாள் 23.11.2016

---

**ஆணை:-**

முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்கள் 31.8.2016 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110–ன் கீழ் பின்வரும் அறிவிப்பினை செய்தார்கள்:-

xxxxxxx

"பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும், பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிடவும், சொந்த கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, கடந்த 5 ஆண்டுகளில் 64 அலுவலகங்களை உள்ளடக்கிய 33 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆண்டு கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் பழனி ஆகிய 3 இடங்களிலும் 6 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவில், 9 வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டடங்கள் கட்டப்படும்."

xxxxxxx

2. மேற்காணும் முன்னாள் முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி ஆணையர், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், பெரியப்பட்டி கிராமம் புல எண்.67/7, (வார்டு—சி, பிளாக்–7)ல் ரூ.3.56 கோடியில் 1345 சதுர மீட்டரில் உதவி ஆணையர் (வணிகவரி), நாமக்கல் (நகர்), உதவி ஆணையர் (வணிகவரி), நாமக்கல் (ஊரகம்) மற்றும் வணிகவரி அலுவலர் (செயலாக்கம்), நாமக்கல் ஆகிய அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்ட பொதுப் பணித்துறையிடமிருந்து வரைபடம் மற்றும் தோராய திட்ட மதிப்பீடு ஆகிய ஆவணங்களை பெற்று அனுப்பி ரூ.3,56,90,000/–க்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, நாமக்கல் வட்டம், பெரியப்பட்டி கிராமம் புல எண்.67/7, (வார்டு-சி, பிளாக்–7)–ல் உதவி ஆணையர் (வணிகவரி), நாமக்கல் (நகர்), உதவி ஆணையர் (வணிகவரி),

நாமக்கல் (ஊரகம்) மற்றும் வணிகவரி அலுவலர் (செயலாக்கம்), நாமக்கல் ஆகிய அலுவலகங்களை உள்ளடக்கிய 1345 சதுர மீட்டரில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.3,45,42,772/–க்கு (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து எழுநூற்று எழுபத்து இரண்டு மட்டும்) நிர்வாக அனுமதி செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.12525/நிதி(வருவாய்)/2017, நாள் 17.03.2017 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் ச. சந்திரமௌலி
கூடுதல் தலைமைச் செயலர் (மு.கூ.பொ)

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி ஆணையர், சென்னை–600005.
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை–5
இணை ஆணையர்(வணிகவரி) சேலம் கோட்டம்,
(கூடுதல் தலைமைச் செயலர் / வணிகவரி ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
அமைச்சர் (மீன்வளம், நிதி மற்றும் நிர்வாக சீர்திருத்தம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
அமைச்சர் (வணிகவரி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித் (வருவாய்/பொதுப்பணி.I/வ.செ.பொ. I/II) துறை, சென்னை–9
பொதுப்பணித்துறை, சென்னை–9
சிறப்பு திட்ட அமலாக்கத்துறை, சென்னை –9
வணிகவரி மற்றும் பதிவுத் (யு1) துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
27/3/17